Registered as a Newspaper

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்,
நல்லவர்கள்
ரெலிகுளோப்
ஆர்.ஜி. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி
முழுமையாக ரெலிபோன்
சேவையிலேயே கண்ணும்
கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088–பத்து
சமாந்தர லைன்கள்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடு ஐப்பசி மீ 13 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 25 (30-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 294

10 நிமிடம் முந்திஞல் பலர் உயிரிழந்திருப்பர்

# ஆஸ்பத்திரி முன்னுல் ஷெல் விழுந்து இருவர் மரணம்

## 33 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 30

தீபாவளிப் பண்டிகையை ஒட்டிய மக்கள் சந்தடியின் மத்தியில், நேற்று கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஷெல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல் குண்டு ஒன்று ஆஸ்பத்திரிக்கு முன்னுல் வெடித்ததில் இருவர் மரணமாகினர். முப்பத்துமூன்று பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை ஆபத்தாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நோயாளரைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்து வாசலில் காத்துநின்றவர்கள் ஆஸ்பத்திரிக்குள் சென்றபின்னரே அப்பகுதியில் ஷெல் விழுந்தது. 10 நிமிடங்களுக்கு முன்னர் சம்பவம் நடந்திருப்பின் இன்னும் பலர் உயிரிழந்திருப்பர்.

நேற்று பகல் பதினெரு மணியளவில் யாழ் கோட்டை முகாமில் இருந்து திடீரென ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ் ஆஸ்பத்திரி வீதி காந்தி சிலைக்கு முன்பாக விழுந்து வெடித்த ஷெல் காரணமாக மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பிராசா தவதீசன் (17 வயது) என்ற இளைஞன் (4 ஆம் பட்கம் பார்க்க)

முக்கு முனி



ஓஹோ, அவையும் தீபாவளிப் பட்டாசு விட்டுப் பாக்கினமோ பின்னை....!

### சுபநேரம்

30-10-1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.33 முதல் 9.03 வரை
ராகுகாலம்:
1.33 முதல் 3.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## 75 பேர் கைது

மட்டக்களப்பு, அக்.30

கிழக்கிலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியைச் சேர்ந்த 75 மாணவர்களை நேற்று நண்பகல் ஆயுதபடையினர் கைது செய்தனர்.

மடக்களப்பு நகரில் அரசடி என்னும் இடத்தில் இக்கல்லூரி இருப்பது தெரிந்ததே.

நண்பகல் அளவில் கல்லூரிக்குள் திடீரென்று நுழைந்த படையினர் 75மாணவர்களை கைது செய்து விசாரணைக்காக கல்லடி முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இச்செய்தி எழுதப்படும் நேரம்வரை, அவர்கள் விடுவிக்கப்படவில்லை. (உ–எ–21)

## பெண் விசாரணையில்

வல்வெட்டித்துறை, அக். 30

நேற்று வல்வெட்டித்துறையில் ஹெலிக்கொப்டரிலிருது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் பெண் ஒருவர் போராளிகளிஞல் கைது செய்யப்பட்டார். (உ–160)

# –ஜனவரியில்– சுதந்திரப்பிரகடனம்

## புலிகள் வெளியிடுவர் என தகவல்

சென்னை, அக். 29

சுதந்திர தமிழீழத்தை உருவாக்கும் பிரகடனம் 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே இந்தப் பிரகடனத்தை வெளியிட இருப்பதாக ஏ. எவ். பி செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

சென்னையில் உள்ள புலிகள் இயக்க வட்டாரத்தை ஆதாரம் காட்டியே ஏ. எவ். பி செய்தி ஸ்தாபனம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தனது பெயரைக் கூற விரும்பாத புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1. 1. 87 இல் சுதந்திர சோஷலிச அரசு நிறுவப்படும் என்று அப்பிரமுகர் சொன்ஞர் என்று ஏ. எவ். பி அறிவித்தது. (அ-ஐ-எ)

# புளொட் இயக்கம் தற்காலிகமாக இயங்காது என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம் அக். 30

'புளொட்' எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழீழத்தில் தற்காலிகமாக இயங்கமாட்டாது.

பிரஸ்தாப இயக்கத்தின் தளச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை (29–10–86) தொடக்கம் இயங்காமல் இருக்க முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தளச் செயற்குழு விடுத்த அறிக்கை வருமாறு:–

வன்னிப் பிராந்தியத்தில் எமது முகாம்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திஞல் தாக்கப்பட்டு, பல தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அத்தோடு எமது ஆயுதங்களும், இதர உடைமைகளும்தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செவ்வாயன்று (28-10-86) த. வி. பு. இயக்கத்தினது யாழ். பிராந்திய தலைமையகத்தில் அவர்களது பொறுப்பாளர்களைச் சந்தித்து வன்னிப் பிராந்திய நிலைமை தொடர்பாக கலந்துரையாடினேம்.

இக் கலந்துரையாடலின்போது சகல பிரச்சனைகளும் சுமுகமாகத் தீர்க்கலாம் என எமக்கு (4ம் பக்கம் பார்க்க)

## ஹெலிகளை நோக்கி வல்வையில் தாக்குதல்

வல்வெட்டித்துறை, அக். 30

ஒரு புறத்தில் ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டவாறு தாக்குதல் நிகழ்த்த மறுபுறத்தில் சிப்பாய்கள் வெளியே வர எடுத்த முயற்சி வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளிஞல் முறியடிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் இரண்டு ஹெலிகள் வல்வை முகாமில் இறங்க முயற்சித்தன அவற்றை (4–ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருந்து படையினர் நேற்று நடைபவனி

யாழ்ப்பாணம், அக். 30

வவுனியாவில் இருந்து மாங்குளம் வரை நேற்று நடை பவனியாக நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் வந்தனர்.

இதஞல் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

இதஞல் கொழும்பில் இருந்து வரும் பஸ்கள் மற்றும் வாகனங்கள் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

நடைபவனியாக வந்த சிப்பாய்களின் பின்னுல் வந்த இவ் வாகனங்களும் மாங்குளத்தில் நேற்று தரித்து நின்றன.

சிப்பாய்களுடன் கவச வாகனங்கள் பலவும் வந்தன.

இன்று இச் சிப்பாய்கள் நடைபவனியாக கிளிநொச்சி நோக்கிப் புறப்படுவர் என்றும் தரித்து நின்ற வாகனங்கள் அவர்களின் பின்னுல் தொடர்ந்து வரும் என்றும் கூறப்படுகிறது. (அ–எ)

## படையினர் சுட்டு மட்டுநகரில் ஒருவர் பலி

மட்டக்களப்பு, அக். 30

நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு நகரில் ஆயுதப்படையினர் சுட்டதில் ஒரு தமிழ் இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் யாரென அடையாளங் காணப்படவில்லை.

நேற்று முன்தினம் கண்ணிவெடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஆயுதப்படையினர் நேற்றுப் பிற்பகல் 4. 30 மணியளவில் சென்றனர். படையினரைக் கண்டு ஓடிய இரண்டு நபர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஒருவர் அந்த இடத்திலேயே மரணமாஞர். மற்றவர் தப்பிவிட்டார். (உ–எ–21)

போராளிகளுக்கு உதவிஞரா?

## முஸ்லிம் வர்த்தகர் மட்டுநகரில் கைது

மட்டக்களப்பு, அக்.30

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவரை ஆயுதப் படையினர் நேற்றுக் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் அரசடியில் நடந்த நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் போராளிகள் பாவிக்க தனது மோட்டார் சைக்கிளை இவர் கொடுத்து உதவிஞர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிகிறது. (உ–எ–21)

## 400 தமிழர் கைது வாழைச்சேனை தேடுதலில்

மட்டக்களப்பு, அக். 30

வாழைச்சேனையிலுள்ள கண்ணன் கிராமம், குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலில் சுமார் 400 தமிழரை ஆயுதப்படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

கிரான் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை

நேற்றுக் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தேடுதல் நடத்தப்பட்டது. (உ–எ–21)

## கழுத்து வரை நீரில் நிற்குமாறு பணிப்பு!

### படையினர் அட்டகாசம்!!

மட்டக்களப்பு, அக். 30

கடந்த செவ்வாய் மட்டக்களப்பு நகரில் ஆயுத படையினரால் கைது செய்யப்பட்ட பலர், மட்டக்களப்பு வாவியில் கழுத்துவரை நீரில் நிற்கும்படி பணிக்கப்பட்டதுடன் துன்புறுத்தவும் பட்டனராம்.

பலர் படையினரால்தாக்கப்பட்டனர்.

இதேவேளை படையினர் அங்கு நடத்திய அட்டகாசத்தில் மட்டக்களப்புப் பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பி முத்துவுக்குச் சொந்தமான மூன்று புதிய வீடுகள் சேதமடைந்தன.

படையினரின் தாக்குதல்களிஞல் காயமடைந்த குடிமக்கள் சிலரின் பெயர்கள் வருமாறு;

1. மீராசாகிபு (65 வயது)
2. தங்கவேலாயுதம் (35 வயது)
3. அலஸ் (45 வயது)
4. யோசப் (54 வயது) மாட்டுவண்டில் ஓட்டுபவர். (உ–எ–21)

# 38 அகதிகளுடன் நேற்று வந்த இரு இந்தியரும் விசாரணையில்

## தலைமன்ஞர் பகுதியில் வைத்து பிடிபட்டனர்

கொழும்பு, அக்.30

"தமிழ் நாடு அரசு" என்று பெயர் பொறிக்கப்பட்ட படகில் தலைமன்ஞர்க் கரையை வந்து அடைந்த இரண்டு இந்தியத் தமிழ் பிரசைகளை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள்முன்னிலையில்வைத்து விசாரணை செய்ய இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இப்படகு 20 பெண்களுடனும் 18 ஆண்களுடனும் தலைமன்ஞர் நோக்கி வருகையில் இலங்கைக்கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

அப்போது படகில் இருந்து இரண்டு இந்தியர்களை கடற்படையினர் பாதுகாப்பில் எடுத்துக் கொண்டனர்.

இரண்டு நபர்களின் பெயர்கள் வருமாறு:

1, கே. குமாரசாமி,
2. வி. நடராஜன்.

இருவரும் மண்டபத்தைச் சேர்ந்தவர்கள்.

படகில் வந்த ஏனையோர் அகதிகள் என்று கூறப்பட்டது.

இரண்டு இந்தியப் பிரசைகளும் என்ன காரணத்துக்காக வந்தனர்? தமிழ் அகதிகளை அவர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத் தொடர்பு நிலையம் திருமலையில் குண்டிஞல் தகர்ப்பு

கொழும்பு, அக். 30

திருகோணமலை நகரிலுள்ளதொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் கடந்த செவ்வாய் நள்ளிரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

நிலையம் பெரிய அளவில் சேதத்திற்குள்ளானதாக அறிவிக்கப்படுகிறது.

இதஞல் திருகோணமலை மாவட்டத்துடஞன தொலைத் தொடர்புகள் முற்ருகத் துண்டிக்கப்பட்டன.

வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் காவலாளியை மிரட்டி கட்டடத்துக்கு வெளியே கட்டிவைத்துவிட்டுக் கட்டத்தை குண்டுவைத்துத் தகர்த்தனர். (உ.எ–ஐ–21)

இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
" அர்ச்சுஞ "
★ அறிவுலக அறிமுகம்
★ கணிதப்புதிர்
★ எண் சிலம்பம்
★ பயணம் தந்த பாடம்
★ சிந்தனைக் கட்டுரைகள்
★ குட்டிக் கதைகள்
★ கருத்தோவியங்கள்
★ கணனி நிகழ்ச்சித் திட்டம்
★ சிந்தனைக் கருவூலங்கள்
உதயன் நிறுவனம் வழங்கும்
"தீபாவளிப் பரிசு"
அர்ச்சுஞ
(திங்கள் இதழ்)
கண்கவர் வாண அட்டைப் படத்துடன்
அர்ச்சுஞ விற்பனையாகின்ருன்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-00 மட்டுமே

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை அகதிகளுக்கு உணவுமுத்திரைவழங்க

## யாழ் செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், அக். 30

யாழ் மாவட்ட செயலகத்தால் நிவாரண உணவு உதவிகள் நிறுத்தப்பட்ட திருமலைக் கிராமங்களைச்சேர்ந்த அகதிகளுக்கு உணவுமுத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலகம் மேற்கொண்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் யாழ் செயலக இணைப்பதிகாரி திரு. கே. இராஜநாயகம் இதனைத் தெரிவித்தார்.

திருக்கடலூர், சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, கற்சுனைக்கல், மூதூர், தம்பலகமம், லிங்கநகர், அன்புவழிபுரம், உப்புவெளி, பாலையூற்று, செல்வநாயகபுரம், திரியாய், திருமலைப்பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் இதில் அடங்குவர்.

இவர்களுக்கு அக்டோபர் மாத முத்திரைகள் வழங்கப்படும்.

கோபாலபுரம், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, கட்டைபறிச்சான், சம்பூர், கந்தளாய் ஆகிய இடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்த அகதிகளுக்கு இருவாரங்களுக்கான நிவாரண உணவுகளையும்; பன்குளம், கன்னியா, தென்னமரவாடி, கிளிவெட்டி, ஆரும்வாய்க்கால், சங்குவேலி, நாமல்வத்தை ஆகிய இடங்களில் இருந்துவந்த அகதிகளுக்கு நான்கு வாரங்களுக்கான உணவுகளையும் வழங்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## பெறுமதி மிக்க பொருள் சமாதானமே

கொழும்பு, அக். 30

வன்செயல்களினால் மக்கள் அலுத்துப் போய்விட்டார்கள். இன்று தேவை சமாதானம்தான். நல்ல வெய்யிலில் தாகத்தினால் கஷ்டப்படுபவன் எப்படி ஒரு கிளாஸ் தண்ணீரைக் கண்டவுடன் துள்ளிக்குதிப்பானோ அந்த நிலையில் தான் நாம் சமாதானத்தைக் காண தவிக்கின்றோம்.

இப்படி பிரதமர் பிரேமதாஸா சொன்னார்.

கொழும்பு மத்திய யூ. என். பி. கிளைக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இக்கருத்தை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலவும் தீவிரவாதச் செயல்கள் கவலை தருகின்றன.

இச் செயல்களுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ஆனால் மக்கள் வன்செயல்கள் பிரிவினைக் கோஷங்கள் குறித்து அலுத்துப் போய்விட்டார்கள்.

இன்று ஐக்கியமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழவே மக்கள் விரும்புகின்றனர்— இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

## சிப்பாய்களும் கேட்கிறார்கள்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ் கோட்டை இராணுவ முகாம் அதிகாரிகளுக்கும் ஈழம் தபால் தலைகள் தேவைப்படுகின்றனவாம்.

ஈழம் தபால் தலைகளை வாங்கி வருமாறு கோட்டைக்குள் இருக்கும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களிடம் சிப்பாய்கள் கேட்கின்றனராம். (இ-10)

## இவற்றுக்கும் சூடு

யாழ்ப்பாணம், அக். 30

கோட்டைக்கு அருகே வரும் கால்நடைகள் மீதும் சிப்பாய்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்கின்றனராம்.

இதன் காரணமாக சில ஆடு, மாடுகள் இறந்துள்ளன. (இ-10)

## விளையாட்டரங்கு

### சென். ஹென்றீஸ் வெற்றி பெற்றது

இளவாலை, அக். 30

சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை சென் ஹென்றீஸ் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூன்றும் பிரிவை 1-5 கோலாலும் முதலாம் பிரிவை 1 -7 கோல்களாலும் சென் ஹென்றீஸ் வெற்றியீட்டியது.

முதலாம் பிரிவுக்கு திரு. ரீ. ராஜேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்,

மற்றொரு ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முப்பிரிவுகளையும் சென்.ஹென்றீஸ் வென்றது.

3 ஆம் பிரிவை 1-2 கோலாலும் 2 ஆம் பிரிவை 1-2 கோலாலும் 1 ஆம் பிரிவை 0 - 5 கோலாலும் அது வென்றது.

2 ஆம் பிரிவில் டொமினிக் இருகோல்களையும் போட்டது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் முறையே திரு.எஸ்.வீ. விக்கிரமசிங்கம், திரு.பீ. அலோசியஸ், திரு. ரீ. ராஜேந்திரா ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். (இ-48)

### சாவகச்சேரியில் தீபாவளித் தின விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, அக். 30

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தீபாவளித் தினத்தன்று ஆண், பெண் இரு பாலாருக்குமான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்த முன் வந்திருக்கின்றது.

இவற்றில் ஆண்களுக்கான 20 மைல் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம், வேக நடைப் போட்டிகள் முக்கியமானவை ஆகும்.

சைக்கிள், தையல் மெஷின் முதலானவையும் வெள்ளிக் கிண்ணங்களும் பரிசுப் பொருள்களாக வழங்கப்படும் என லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து காலை ஏழு மணிக்கும் பெண்களுக்கான போட்டி கைதடிச் சந்தியிலிருந்து எட்டு மணிக்கும் ஆரம்பமாகும். (இ-31)

## சேவை

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையானாலும் வாங்கவும் / விற்கவும் தினமும் எம்மிடம் வாருங்கள். ஏல விற்பனை நிலையம், பொதுச்சந்தை, (சந்திக் கருகாமையில்) கோப்பாய்.

## விற்பனைக்கு

### விதைகள்

நல்ல இன குரங்குவால் பயித்தை, புசுட்டா பயித்தை கத்தரி, வீட்டுத் தோட்ட மரக்கறிவிதைகள் கிடைக்குமிடம்;

ராசா போரேஜ் ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி. ரகு ஸ்ரோர்ஸ், நவீனசந்தை, பண்டத்தரிப்பு.

## வகுப்புகள்

SCIENCE CENTRE KARAVEDDY

க. பொ. த (உயர்) 87 ஆகஸ்ட் வினாவிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு. விஞ்ஞான பாடங்கள் மட்டும், ஆரம்பம்- 7-11-1986.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மாணவர் பேரவையின் ஆண்டுக்கூட்டம்

கரவெட்டி, அக். 30

பள்ளிப் பருவத்திலே அள்ளிப் பருகும் ஆழ்ந்த அறிவும் அனுபவமுமே முன்னேற்றத்தை ஏற்புடையதாக்குகின்றன. வகுப்பறைக் கல்வியுடன் நின்றுவிடாது ஆற்றல்களை வெளிக்கொண்டு வரக்கூடிய அனுபவ செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடவேண்டும்.

வதிரி திரு இருதயக் கல்லூரி மாணவர் பேரவையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மேற்படி கல்லூரி அதிபர் திரு. சி. வின்சென்ற் மேற்கண்டவாறு கூறினார். (இ-70)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## வடக்கு, கிழக்கில் பணியாற்ற பிரெஞ்சு டாக்டர்களில் ஒரு பிரிவினர் வந்து சேர்ந்தனர்

கொழும்பு, அக். 30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் பணிபுரிவதற்காக பிரெஞ்சு வைத்திய நிபுணர் குழுவின் ஒரு பிரிவினர் கொழும்பு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

மோதல்கள் காரணமாக அவதியுறும் நாடுகளுக்கு பிரெஞ்சு அமைப்பு ஒன்று வைத்திய நிபுணர்களை மனிதாபிமான அடிப்படையில் அனுப்பி வருகின்றது.

இப்படி 40 நாடுகளில் பிரெஞ்சு டாக்டர்கள், தாதிமார்கள் பணி புரிகின்றனர்.

இலங்கைக்கு 50 டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள், தாதிகள் கொண்ட கோஷ்டியே வருகிறது.

போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சும் புனர்வாழ்வு அமைச்சும் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்றே இவர்களை பிரெஞ்சு அமைப்பு அனுப்புகிறது.

கூடுதல் அலவன்ஸ் தருவதாகக் கூறியும் வன்செயல்கள் காரணமாக இலங்கை டாக்டர்கள், தாதிமார் வடக்கு கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பணியாற்றத் தயங்குகின்றனர்.

அதைத் தொடர்ந்தே இரண்டு அமைச்சுக்களும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன. (இ-எ)

## ஹெலி நடமாட்டம்

பூநகரி, அக். 30

பூநகரி 4 ஆம் கட்டையிலுள்ள இராணுவ முகாமில் கடந்த திங்கட்கிழமை ஹெலிக்கொப்டர் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

இரு ஹெலிக்கொப்டர்கள் முகாமுக்கு வருவதும் போவதுமாக இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-124)

## பிரசைகள் குழுவின் சிபார்சு இணைக்கப்பட்டால் உதவி துரிதமடையும்

சுன்னாகம், அக். 30

சுன்னாகம் பிரதேசத்தில் இருந்து நிவாரண உதவிகள் கோரி வரும் விண்ணப்பங்களுடன்சுன்னாகம் பிரசைகள் குழுவின் சிபார்சு இணைக்கப்படுமானால் உதவிகளைத் துரிதப்படுத்த முடியும்.

சுன்னாகம் பிரஜைகள் குழுவினர் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் உயர் அதிகாரிகள் குழுவைச் சந்தித்து நிவாரண உதவிகள் தாமதமாவதற்கான காரணங்களைக் கேட்டறிந்தனர்.

அப்போது மேற்கண்டவாறு அகதிகள் புனர்வாழ்வு கழக உப தலைவர் கூறினார்.

1983ஆம் ஆண்டுக்குப் பின் வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கென நிவாரண உதவிகள் கோரி சுன்னாகம் பிரசைகள் குழு சிபார்சு செய்வோரில் பலர் இன்னமும் எவ்வித நிவாரண உதவியும் பெறுமல் உள்ளனர்.

இது குறித்து திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையிலான நால்வர் குழு அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்தது.

இதனை அடுத்து உதவிகள் வழங்கப்பட்டோர் பட்டியல் தயாராகிறது.

பிரசைகள் குழுவின் சார்பில் தலைவர் தி. மாணிக்கவாசகர், திரு. இ. இளையதம்பி, திரு. எஸ் வைத்திலிங்கம், உதவிச் செயலாளர் சபா. புஷ்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-27)

## அன்னை இந்திரா ச. ச. நிலைய திறப்புவிழா

யாழ்ப்பாணம், அக். 30

அன்னை இந்திரா சனசமூகநிலைய திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இருபாலை விதானையார் வீதியில் நடைபெறும்.

வலி-கிழக்கு ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. செ. சபாரத்தினம் அவர்கள் விழாவுக்குத்தலைமை வகிப்பார்,

திரு. சி. கனகையா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நிலையத்தைத் திறந்து வைப்பார்கள்.

திரு. ரி. ஆர். செல்வரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து அன்னை இந்திராவின் உருவப் படத்தை திரை நீக்கம் செய்வார்கள். பண்டிதர் ச. இராச[illegible]கள்

ரத்தினம், திரு. எஸ். சின்னத்துரை ஆகியோர் [illegible] (இ-10)

## மட்டக்களப்பில் படையினர் தேடுதலால் விவசாயிகள் பாதிப்பு

மட்டக்களப்பு, அக். 30

படையினரின் தேடுதல் நடவடிக்கையினால் தமிழ் விவசாயிகள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாதவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் பணத்தை முதலீடு செய்வதில் எவ்வித பயனும் இல்லை.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்ட விவசாயிகள் கூட்டத்தில் உரையாற்றிய பிரசைகள்குழு உபதலைவர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் திரு. ம. சிவநேசராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கலந்துகொண்ட விவசாயிகள், படையினரின் கெடுபிடிகளினால் விவசாயத்தை சுதந்திரமாக செய்ய முடியாதிருப்பதாக த்தெரிவித்தனர்.

வண. பிதா சந்திரா பெர்னாண்டோ மேலும் உரையாற்றுகையில்,

இலுப்படிச்சேனையில் களைபிடுங்கிய விவசாயிகள் கைதுசெய்யப்பட்டனர். தங்கவேலாயுதபுரத்தில் குடுமிதித்துக் கொண்டிருந்த 65 தமிழ் விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். வாகனேரியில் வேலைமுடிந்து மரநிழலில் ஓய்வு எடுத்த 16 விவசாயிகளை படையினர் அழைத்துச் சென்றனர். இதுவரை தகவல் இல்லை. அன்றிரவு 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று வானொலி அறிவித்தது.

இத்தகைய உயிருக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலையில் இம்மாவட்ட விவசாயிகள் தவிக்கிறார்கள்.

விவசாயப் பகுதிக்குச் செல்லும் பிரதான பாதைகளில் ஆயுதப் படை முகாம்கள் உள்ளன. இதனால் உழவு இயந்திரம், நெல்மூடைகள் உட்பட உடைமைகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

வயல்களில் தொழில் செய்ய தொழிலாளிகள் மறுப்புத் தெரிவிக்கிறார்கள். இந்நிலைமை மாற வேண்டுமென்றால் அனைவரும் கூட்டு அடிப்படையில் இணைந்து குரல் எழுப்பவேண்டும் என்றார். (இ-21)

## செய்திக்கொத்து

### நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், அக். 30

திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்கல்வி டிப்ளோமா (1986-87) பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9-00 மணிதொடக்கம் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக் கழக நிலையத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். (இ)

### வல்வையில் கடை கொள்ளை

வல்வெட்டித்துறை, அக். 30

வல்வையில்உள்ள ஆறுமுகம் என்பவருக்குச் சொந்தமான பலசரக்குக் கடை உடைத்துக் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் நடந்தது.

இதற்கு அண்மையில் உள்ள ஒரு மருந்துக் கடையையும் உடைக்க முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் அது கைகூடவில்லை. (இ-160)

### கால்வாயில்.....

வல்வெட்டித்துறை, அக். 30

வல்லைவெளியில் உள்ள பாலத்திற்குக் கீழ் உள்ள கால்வாய் நீரில் ஏராளமானோர் மீன் பிடிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (இ-160)

### பாலபண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், அக். 30

நாவலர்சைவத்தமிழ்ப் பண்பாட்டு நிலையத்தினர் விஜயதசமியன்று தொடக்கிய பிரவேச, பாலபண்டித வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவ்வகுப்புக்கள் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறுகின்றன. (இ)

### வைத்தீஸ்வர வித்தியாலயத்தில்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் செல்வன் க. அருந்தவராசா தலைமையில் உயர்தர மாணவர் மன்றத்தின் சிறப்புக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பகுதிநேர விரிவுரையாளர் திரு. இ. இரத்தினம் 'காப்புறுதி' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார். (இ)

### அலுவலகம் இடம்மாற்றம்

கரவெட்டி, அக். 30

உடுப்பிட்டி, கட்டைவேலி தென்னம் பனம் பொருள் அபிவிருத்தி அலுவலகம் நெல்லியடி யாழ் - பருத்தித்துறை வீதியில் இருந்து நெல்லியடி - கொடிகாமம் வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (இ-70)

### உதவி அரச அதிபர் அலுவலகம் இடம் மாறும்

யாழ்ப்பாணம், அக். 30

சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நவம்பர் முதலாம் திகதியில் இருந்து முன்னர் பொலீஸ் நிலையம் இயங்கி வந்த தனியார் கட்டடத்துக்கு மாற்றப்படவிருக்கிறது.

தற்போது அலுவலகம் உள்ள கட்டடம் வசதியற்றதாக இருப்பதால்தான், புதிய கட்டடத்துக்கு மாற்றப்படுகின்றது. (இ-எ)

### புதிய தளபதி

கொழும்பு, அக். 30

இலங்கைக் கடற்படையின் புதிய தளபதியாக கமடோர் ஆனந்த டி சில்வா அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பதவி ஏற்கிறார். (இ-ஐ-எ)

### அறுவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, அக். 30

டென்மார்க்குக்கு சிங்கப்பூர் வழியாக செல்ல முயற்சித்த இலங்கைப் பயணிகளில் 6 பேர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

17 இலங்கைத் தமிழ்ப் பயணிகள் எப்படியோ சிங்கப்பூரிலிருந்து டென்மார்க் பயணமாகினர். (இ-எ)

### கருத்தரங்கு

இளவாலை, அக். 30

இளவாலை, மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மாவிட்டபுரம் அரிமாக் கழகத்தினரால் உழவர்களுக்கான விவசாயக் கருத்தரங்குஒன்று நடத்தப்பட்டது.

கருத்தரங்கில் அரிமாக் கழகத் தலைவர் திரு.பீ. ஜே. அந்தோனிப்பிள்ளை சிறப்புரை நிகழ்த்தினார்.

திரு. ரகுபதி கருத்தரங்குக்கு தலைமை வகித்தார். திரு.எம். சிவராசரெத்தினம்வரவேற்புரை கூறினார்.

விவசாயத்துறை வல்லாளர், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு மேல் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

கருத்தரங்கு இளவாலை மக்கள் நலன்புரிச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப் பட்டது. (இ-48)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 30

புகைத்தல், மதுபானம், போதைவஸ்து போன்றவற்றின் கெடுதியை மாணவர்களுக்கு விளங்கவைக்கும்முகமாக பாடசாலைமாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை யாழ் கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். இந்துமகளிர்கல்லூரியில் நவம்பர் 5ஆம் திகதி இக்கருத்தரங்கு நடைபெறும்.

இதில் சகலயாழ் பாடசாலைகளிலிருந்தும் ஜீ.சீ. ஈ. உயர்தர மாணவ பிரதிநிதிகள் இருவர் கலந்துகொள்வார்கள். (இ-5)

## சமாதான யோசனை தோற்றால் மாற்று வழி அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, அக். 30

அரசின் சமாதான யோசனைகள் தோல்வி கண்டால் மாற்று வழியை நாடுவோம்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

ஹேவகெட்ட தொகுதியில் நடந்த கூட்டம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை பேசுகையில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

வன்செயலை முடிவுக்கு கொண்டு வரும் வரை நாம் ஓயமாட்டோம். தீர்வு ஒன்றின் மூலம் பிரச்சினைக்கு முடிவு காணுவதே நல்லது.

இதில் வெற்றி காணத் தவறினால் நாம் வேறு வழியைத்தான் நாடுவோம்.

அதற்கான பலமான தலைமை எம்மிடம் உண்டு. எம்மால் அதைச் செய்யவும் முடியும்.

இப்படி அமைச்சர் லலித் சொன்னார். (இ-எ)


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● குவைத் ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,

குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பண் இல: 764 பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு: N. பாலா திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

வெற்றி தோல்விகளைச் சமமாகக் கொண்டு பற்றுதலை விட்டு யோகியாக கருமம் புரிவாயாக. சமமாகக் காணும் பான்மையே யோகம் எனப்படுவது.

— பகவத் கீதை

உதயன்

உண்மை - இருசாலை - ஒரு நிலைமை

இல. 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

30-10-1986 த. பெ. இல.23

# நவம்பர் மூன்றில் முக்கிய பரீட்சை!

சாகா வரம்பெற்ற அசுரர்கள் பலர் குறித்து புராணக் கதைகள் பலவற்றில் கேள்விப்படுகிறோம். அதர்மம், அநீதி, அட்டூழியம், அநியாயம், அக்கிரமம் ஆகியவற்றின் உருவகங்களாகவே அந்த அசுரர்கள் விளங்குவதையும் காண்கிறோம்.

அந்த அசுரர்கள் போன்றதே இலங்கை என்று அழைக்கப்படும் ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சினை. அதுவும் தீர்வு இல்லாத வரம் பெற்றதாகவே விளங்குகிறது.

கடந்த முப்பத்தெட்டு வருடங்களாகத் தீர்வு இல்லாமல் இழுபடும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பது பலரின் விருப்பம். அது தீராமல் இருந்தால் தமக்குச் சாதகம் என்பது தென்னிலங்கை அரசியல் வாதிகளின் ஆசை.

எனினும் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து விட வேண்டும் என்று தற்போதைய ஸ்ரீலங்கா அரசு வேஷம் போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிர்ப்பந்த நிலையை உருவாக்கியவர்கள் எமது அருமைத் தம்பிமார்களான தமிழ்ப் போராளிகள். அதை யாரும் மறைத்துவிட முடியாது.

தீரா வரம் பெற்ற இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் இப்போது இந்தியாவும் சம்பந்தப்பட்டுவிட்டது. தீர்வு முயற்சி முத்தரப்பு விடயமாகி விட்டது; முப்பரிமாணம் உடையதாகி உள்ளது.

அந்த முத்தரப்பு முயற்சியில் இப்போது மிகவும் முக்கியமான கட்டம் உருவாகியுள்ளது.

இலங்கை அரசாங்கம் மாகாணசபைத் திட்டம் என்றும், இடைவெளி நிரப்பும் யோசனை என்றும், புதுப்பித்தல் யோசனை என்றும், புதிய நகல் என்றும் பல்வேறு வடிவங்களில் இந்தியாவிடம் கையளித்த உருவாக்கங்கள் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவையாக இருக்கவில்லை. தமிழர் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான அரிச்சுவடியாகத் தானும் இல்லை.

இலங்கையின் திட்டம் எதுவுமே இந்தியாவுக்கே திருப்தியைத் தருவதாக இல்லை என்பது இப்போது ஊர்ஜிதமாகி விட்டது. அதனால் புதுடில்லி இப்போது தீர்வுக்கான சமரசத் திட்டத்தைத் தாமே தயாரித்து வருகிறது.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்ப் போராளிகள் குழுக்களை கடந்த திங்கட்கிழமை அழைத்துப் பேசினார். இலங்கையின் ஆகப் பிந்திய யோசனைகள் குறித்து அப்போது ஆராயப்பட்டது. மீண்டும் எதிர்வரும் மூன்றாம் திகதி இருசாராருக்கும் சந்திப்பு நடக்கிறது. அப்போது இந்தியா தயாரித்து வரும் சமரசத் திட்டம் போராளித் தலைவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களது அபிப்பிராயம் பெறப்படும்.

அதன் பின்னர் இந்தியத் திட்டம், போராளிகளின் கருத்து என்பனவற்றை அடிப்படையாக வைத்து ராஜீவ் – ஜே. ஆர். உச்சிப் பேச்சு நடக்கும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இதனை மற்றொரு திருப்புமுனையாகக் கருத இடமுண்டு. இதுவரை ஸ்ரீலங்கா அரசும் கூட்டணியும் முன் வைத்த திட்டங்களே நீண்ட காலமாக ஆராயப்பட்டன. இப்போது இந்திய அரசு முன்வைக்கும் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசும், ஈழப் போராளிகளும் ஆராயப் போகிறார்கள்.

இதே வேளை, ஈழப் போராளிகள் கலந்து கொள்ளாத எந்தப் பேச்சும் தீர்வுக்கு வழி வகுக்காது என்பதையும் இந்திய அரசு ஸ்ரீலங்காவுக்கு உணர்த்தி இருக்கிறது.

போராளிகள் ஒத்துழைப்பின்றி கூட்டணி செயற்பட முடியாது. எதையும் செய்ய இயலாது என்பதையும் இந்தியா ஸ்ரீலங்கா அரசுக்கு புட்டுக்காட்டியிருப்பதாக அறியப்படுகிறது.

உண்மை நிலையும் அதுவே. யார், யார் எது எதைத்தான் சொன்னாலும் ஈழத் தமிழ் மக்களோடு ஒன்றி உறவாடுபவர்கள் தமிழ்ப் போராளிகளே. மக்கள் ஆதரவும் அவர்களுக்கே உண்டு.

அதனை விஜய குமாரணதுங்காவின் யாழ் விஜயமும் ஸ்ரீலங்காவுக்கு உணர்த்தியிருக்கும். லங்காபுவத்தை வைத்துக் கொண்டு அரசு சிங்கள மக்களை உண்மை நிலைக்குப் புறம்பான ஓர் உலகத்தில் வைத்திருக்கிறது. அதே போல இந்தியாவையும் வைத்திருக்க முடியுமா?

ஆகையால் கூட்டணியோடு மட்டுமன்றி போராளிகளுடனும் பேச வேண்டும் என்று இந்தியா உணர்த்தி இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

தமது அரசியல் அபிலாஷைகளை, எதிர்கால எதிர்பார்ப்புகளை எந்தக் கட்டத்திலும் போராளிகள் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் ஈழத் தமிழ் மக்களிடம் உண்டு. அது இந்தியாவுக்கும் புரியும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், நவம்பர் மூன்றாம் திகதி இனப்பிரச்சினைத் தீர்வின் முக்கிய பரீட்சை தினமாக இருக்கப் போகிறது. அதைவிடக் கடினமான பரீட்சையாக ராஜீவ்– ஜே. ஆர். சந்திப்பு அமையும் என எதிர் பார்க்கலாம்.

### அமெரிக்காவும் ஆதரவு

லண்டன், அக். 29

சிரியாவிற்கு எதிராக பிரிட்டன்மேற்கொண்ட நடவடிக்கையை அமெரிக்கா ஆதரித்துள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து சிரியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும். இதற்கென அமெரிக்க அதிகாரிகள் ஐரோப்பா சென்றுள்ளனர்.

பயங்கரவாத ஒழிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் போல் டுமார் தற்பொழுது லண்டன் வந்துள்ளார். அவர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார். (ஒ)

### சவூதியின் முடிவு

ஜமா, அக். 29

அமெரிக்காவிற்கு விற்பனை செய்யப்படும் மசகு எண்ணெய் விலையில் பீப்பா ஒன்றிக்கு 50 டாலர் கழிவை வழங்க சவூதி அரேபியா முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் எண்ணெய் விற்பனையைத் தொடர்ந்தும் ஸ்திர நிலையில் வைத்திருக்கவே இந்தக் கழிவு வழங்கப் படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒபெக் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கும் சவூதி அரேபியாவின் இந்த முடிவு அதற்கு முரண்பட்டதாகும்.

எனினும் மசகு எண்ணெயை அதன் தற்போதைய விலையில் அமெரிக்காவில் விற்பனை செய்ய முடியாததும், சவூதி அரேபியாவின் மசகு எண்ணெய் விற்பனை அமெரிக்காவில் குறைந்து வருவதும் இந்த நடவடிக்கைக்கு காரணமாகும் என சவூதி அரேபிய அமைச்சர் தகவல் வெளியிட்டார். (ஒ)

# உலக நீதிமன்ற தீர்ப்பு

# அமெரிக்கா நிராகரிப்பு

## நிக்கராகுவா கிளர்ச்சியாளருக்கு ராணுவ உதவி மீதான நடவடிக்கை

மனாகுவா, அக். 29

நிக்கராகுவா கிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்கும்சகலராணுவ உதவிகளும் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு உலக நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி நடக்குமாறு கோரும் தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா ரத்து அதிகாரத்தால் நிராகரித்துவிட்டது.

இத் தீர்மானத்திற்கு 11 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

பிரிட்டன், பிரான்ஸ் தாய்லாந்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

101 அணிசேரா நாடுகள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தன.

அமெரிக்காவின் ரத்து அதிகார நடவடிக்கை சர்வதேச சட்டத்தையே மீறிய செயலாகும் என நிக்கராகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டாகே அறிவித்தார். (ஒ)

## சமாதானத் தீர்வா, கடும் நடவடிக்கையா?

மணிலா, அக். 29

பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதான தீர்வு காணப்பட வேண்டும். தவறினால் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரசின் அக்கினோ கடுமையாக எச்சரித்தார்.

கம்யூனிஸ்ட் கிளர்ச்சிவாதிகளுடன் எவ்வளவு காலத்திற்குப் பேச்சுவார்த்தை நடைபெறும் என ஒரு காலக்கெடு விரைவில் அறிவிக்கப் படும். இதனைத் தொடர்ந்து சமாதானம் சமரச தீர்வு காணப்படாவிடின் இராணுவ ரீதியில் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

பிலிப்பீன்ஸின் 74 மாகாணங்களில் 62 இல் கடந்த17 வருடங்களாக இவ்விதமானகிளர்ச்சிகள் தொடர்கின்றன. இதனால் மக்களது நல்வாழ்வும் நாட்டின் பொருளாதாரமும் நாசமாகி வருகின்றது.

இந்த நிலைமையை மாற்றம் காண வைப்பது முக்கியமானதாகும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## பிரத்தியேக வேலை செய்வதற்குத் தடை

டாக்கா, அக். 29

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் தொடர்ந்தும் சொந்த முறையில் பிரத்தியேகமாக தொழில் செய்வது பங்களாதேஷில் தடை செய்யப்படும்.

புதிதாகப் பயிற்சி முடித்து வெளியேறிய டாக்டர்களுக்கு வேலை வசதி பெற்றுக் கொடுப்பது இதன் நோக்கமாகும்.

பங்களாதேஷிலுள்ள எட்டு மருத்துவக்கல்லூரிகளிலுமிருந்து வருடாவருடம் ஆயிரம் மாணவர்கள் பயிற்சி முடித்து வெளியேறுகின்றார்கள். இதனால் அவர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது

டாக்டர்கள் பிரத்தியேக தொழில் முறை படிப்படியாக குறைக்கப் படும்.

சிரேஷ்ட டாக்டர்கள் முதலில் இதற்கு தடை விதிக்கப்படுவார்கள். இதற்காக அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப் படும்.

இளம் மருத்துவர்கள் பிரத்தியேக தொழில் ஆரம்பிக்க விரும்பினால் அரசாங்கத்தில் பணி புரிய முடியாது. அவர்களுக்கு பிரத்தியேக வைத்தியசாலைகள் அமைப்பதற்கு வங்கிகள் கடனுதவி வழங்கும். (ஒ)

## வெளி உலகில்

### சுரங்க தொழிலாளர் வேலை நிறுத்தம்

கேப்டவுன், அக். 29

தென் ஆபிரிக்க தங்கச் சுரங்கங்களில் கடமையாற்றும் முப்பதாயிரத்துக்கும் அதிகமான கறுப்பு இன தொழிலாளர்களது வேலை நிறுத்தம் கடந்த ஒருவார காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மூன்று பிரதான தங்கச் சுரங்கங்களில் சம்பள உயர்வைக் கோரி இந்த வேலை நிறுத்தம் இடம்பெறுகிறது.

நேற்று நடைபெற்ற மோதல்களில் பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது கோரிக்கை நியாயபூர்வமானது என சுரங்க உரிமையாளர் ஒருவர் தெரிவித்த போதிலும் தென் ஆபிரிக்க அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய இரு சுரங்கங்களும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. (ஒ)

### சுமத்திராவில் பெரு வெள்ளம்

ஜகார்த்தா, அக். 29

தெற்கு சுமத்திராவில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 30 பேர் உயிரிழந்தனர் பலர் காணமல் போய் உள்ளனர்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து பாதுகாப்பான பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (ஒ)

### வியன்னாவில் சந்திப்பார்கள்

வியன்னா, அக்.29

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் எட்வாட் சேவனுன்சேயும் அமெரிக்கவெளிநாட்டுஅமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸும் அடுத்த வாரம் ஆஸ்திரியாவில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள்.

ஆஸ்திரியாவில் நடைபெற இருக்கும் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இவர்கள் இருவரும் வியன்னா செல்வார்கள்.

### எண்ணெய் விலை வீழ்ச்சி

லண்டன், அக். 29

எண்ணெய்க்கு கூடுதலான விலையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் அதன் உற்பத்தி தொடர்பான கட்டுப்பாடுகளைப் புதுப்பிப்பது என்று 'ஒபெக்' ஸ்தாபன நாடுகள் முடிவு செய்து ஒரு வாரகாலத்தினுள் எண்ணெய் விலை வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது.

சவூதி அரேபியா குறைந்த விலைக்கு எண்ணெயை விற்பனை செய்ய முன்வந்துள்ளது.

பிரிட்டனின் வடகடலில் இருந்து பெறப்படும் எண்ணெயையும் குறைந்த விலைக்கு விற்க வேண்டும் என கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

# விலைக்கட்டுப்பாடு, லைசென்ஸ்

## தொடர்பாக ஈ. பி, ஆர். எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம், அக்.30

ஈழ தேசிய நிர்வாகத் துறையின் கீழ் தாம் நடத்தவுள்ள விலைக்கட்டுப்பாடு சேவை, லைசென்ஸ் ஆகியவை தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று யாழ் குடா நாட்டில் ஸ்ரீலங்கா அரசு எமது போராட்டத்தின் மூலம் செயற்பாடற்றுப் போயுள்ளதால் சிவில் நிர்வாகம் சில துறைகளில் ஸ்தம்பித்தும் சில வற்றில் சீர்குலைந்தும் போயுள்ளது. இந் நிலைமையில் ஸ்ரீலங்கா அரசின் விலைக்கட்டுப் பாட்டு அலுவலகமும் செயலற்றுப் போயுள்ளது.

இதனால் பொது மக்கள் ஏமாற்றப்படுவதுடன் மிகுந்தளவு சுரண்டலுக்குள்ளாகின்றார்கள். எனவே விலைக்கட்டுப்பாடு சேவையும் அவசியமாகியுள்ளது.

இதற்கு பொது மக்களின் பூரண ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

**அறிவுறுத்தல்கள்:**

மக்கள் பின்வரும் விடயங்கள் குறித்து விழிப்பாக இருக்கவும். இவை விலைக்கட்டுப்பாட்டு விதிகளின் கீழ் குற்றங்கள் எனக் கொள்ளப்படும்.

1. பதுக்கல்:

2. பொருட்கள் மீது குறிக்கப்பட்டுள்ள விலையிலும் கூட விற்றல்.

3. கட்டுப்பாட்டு விலையை மீறி விற்றல்.

4. நிபந்தனையுடன் விற்றல்.

5. வைத்துக் கொண்டு விற்க மறுத்தல்.

6, பொருள்களில் குறிக்கப்பட்ட விலைகளை அழித்தல்.

7. நிறை குறைத்து உற்பத்தி செய்தலும், அப்பொருள்களை விற்றலும்.

8. எடை, அளவை குறைத்து அளத்தல், விற்றல்.

9. முத்திரை பொறிக்கப்படாத தராசு, அளவு கோல்களை பாவனையில் வைத்திருத்தல்.

10. பொருள்களுக்கு விலைப்பட்டியல் போடாது விடல்.

11. பாவனையாளர் பற்றுச்சீட்டுக் கேட்கும் இடத்தில் கொடுக்காது விடல்.

12. பாவனைக்கு உதவாத, காலாவதியாகி விட்ட பொருள்களை விற்பனைக்கு வைத்தல்.

13. கலப்படம், ஏமாற்றுதல்.

14. பொருள்களின் பாவனைக்காலம், தரம், பயன்பாடு,உத்தரவாதங்கள், விலைக்குறைப்புகள் போன்றவற்றை திரித்துக் கூறல்.

15. விலைகளில் ஏற்றத் தாழ்வு காட்டுதல்.

16. சந்தைகளில் பலாத்காரமாக ஆதிக்கம் செலுத்தி முழு உரிமையை நிலைநாட்ட முற்படல்.

17. மெற்றிக் அளவுகளைப் பாவிக்காமை—ஆகியவை குற்றங்களாகும். இச்செயற்பாடுகளைச் செய்யும் எந்த வர்த்தகரும் அதற்குரிய தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

மேலும் பதுக்கல், விலை கூட்டி விற்றல் போன்றவற்றைத் தடுப்பதற்கு எமக்கு பொருள்கள் பற்றிய கணக்கெடுப்புகளும் இதர விவரங்களும் தேவை.

சகல தொழில் நிறுவனங்களும் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குரிய விலைக்கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரங்களும்—

வியாபார ஸ்தாபனங்கள் விற்கும் பொருள்களுக்குரிய விலைக்கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரங்களும்—

ஈழப் பிரதேசத்திற்கு வெளியிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்பவர்கள் இறக்குமதிக்குரிய பொருள்களுக்கான அனுமதிப் பத்திரங்களும்—

'ஏற்றுமதி' செய்பவர்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கான அனுமதிப்பத்திரமும் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

1987 ஆம் ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர் குறுக்குத் தெருவிலுள்ள எமது ஈழ தேசிய நிர்வாகத்துறை அலுவலகத்தில் 15–11– 1986 முதல் பெற்றுக் கொள்ளலாம். (உ)

## பிக்குகள் இடம்மாறினர்

கொழும்பு, அக்.30

குடும்பியாகல குகைகளில் தியானத்தில் ஈடுபட்டுவந்த 20 பெளத்த பிக்குகள் லொல்ஹேலதபோவனத்தில் தியானம் செய்து வருகின்றனர்.

தீவிரவாதச் செயல்கள் காரணமாகவே இப்பிக்குகள் குடும்பியாகல பகுதியில் இருந்து வெளியேறி விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## சமய சந்திகளில்

### ஊரெழுவில் சமய தீட்சை

யாழ்ப்பாணம். அக்.30


எதிர்வரும் 14 ஆம் திகதி ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமை ஊரெழு கிழானைப் பதி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் சமயதீட்சை வைபவத்தை நடத்துவதற்கு ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

சமய தீட்சைக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் அவர்களின் தலைமையில் நடைபெறும். (ஒ)

## அஞ்சலிக் கூட்டம்

கிளிநொச்சி, அக்.30

கப்டன் ம. சிவலிங்கம் (லோறன்ஸ்) கொக்குத் தொடுவாய்முல்லைத்தீவு, லெப்டினன்ட் க. சிவமூர்த்தி (சபா) கொக்குத் தொடுவாய்முல்லைத்தீவு, இரண்டாவது லெப்டினன்ட் ந. இராசேந்திரன் (லலித்) முள்ளியவளை, இரண்டாவது லெப்ரினட் த. இரத்தினசாமி (ஜீவா) முள்ளியான் ஆகியோர் வீரமரணம் அடைந்து ஓர் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் வெகு விமரிசையாக நடைபெற்றன. (இ-76)



## பொய்யாமொழி

**குறள்:**

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

**பொருள்:**

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளத்தில் எல்லாம் இருப்பவனாவான்.

## இடிந்து போனதோ...



[மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் நினைவு தினம் இன்றாகும். அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது]

இந்தியத்தாய் இருகண்கள்
கலங்குவ தேனோ?
இமயமெனும் இதயம் நொந்து
புலம்புவ தேனோ?
வங்கத்துக் கடல் மௌனம்
கொண்டதும் ஏனோ?
வைகை கங்கை ஜமுனையெலாம்
வரண்டது மேனோ?

நிமிர்ந்து நின்ற உடல்கள் சோர்ந்து
தளர்ந்து போனதோ?
நீலவானப் பறவை சிறகிழந்து
வாடுகின்றதோ.
அலைந்து மகிழ் கானினங்கள்
அடங்கிப் போனதோ?
அன்னையுந்தன் மறைவு கண்டு
அனைத்தும் ஓய்ந்ததோ?

பூத்துக் குலுங்கும் மலர்கள் சோபை
இழந்ததும் ஏனோ?
புன்னகையை மழலைப் பூக்கள்
மறந்ததும் ஏனோ?
நேற்றுவரை நிமிர்ந்து நின்ற
இயற்கைக ளெல்லாம்
நேருமகள் உன்பிரிவால்
இடிந்து போனதோ?

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## 1987 இல்

# சகல பாடசாலைகளும் கொத்தணியின் கீழ்

யாழ்ப்பாணம், அக், 30

1987ஆம் ஆண்டில் அரசின் சகல பாடசாலைகளும் கொத்தணி அமைப்பின்கீழ் இயங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு பூர்த்தியாக்கியுள்ளது.

யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் வெள்ளை அறிக்கையின்படி சகல மாவட்டங்களிலும் பரீட்சார்த்தமாக அறிமுகப் படுத்தப்பட்ட கொத்தணி அமைப்புமுறை இன்று படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு முறை வளங்களைச் சமனாக பகிர்வதற்கும்; அதிகாரப் பரவலாக்கத்திற்கும்; நேரடிமேற்பார்வைக்கும் இலகுவானது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ் பிரதேசத்தில் கல்வித் திணைக்களத்தால் இதுவரை வேலணை, புங்குடுதீவு, கோப்பாய், வட்டுக்கோட்டை, நெல்லியடி, நெடுந்தீவு உசன் போன்ற கொத்தணி அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Wyman English Language
INSTITUTE
G.C.E. O/L Dec. 86
ஆங்கிலப்பாட
மீட்டல் வகுப்புகள்
இலவச மாதிரி வினாப்பத்திரங்களுடன்
இருபது வகுப்புகள். ஆரம்பம்:
2 - 11 - 86
S. B. IYAR 3 - 11 - 86

# உதயன்

30 - 10 - 1986 வியாழக்கிழமை

Wyman English Language
INSTITUTE
G.C.E. O/L Dec. 86 ஆங்கிலம்
PAPER CLASS
ஆரம்பம்: 2 - 11 - 86
(சனி - காலை 7 - 9 மணி
(ஞாயிறு - காலை 11 - 1 மணி
S. B. IYR (ஆரம்பம்: 3 - 11 - 86)
(காலை8.மலை 6—7ப3-4,5

## வித்தாரம்

ஹலோ முரளியார் எப்படி?

நேற்றுத் தான் உம் மோடை ரவுணிலை தீபாவளிக்கு உடுபிடவை வாங்க வாற சனத்தைப் பற்றிக் கதைச்சனுன். பசார் பக்கம் கங்குகரையில்லாமல் சனம் நடமாடுதெண்டு.

நேற்றைக்குக் காலையிலையும் அந்தப் பக்கம் ஒரு 'ரவுண்ட்' அடிச்ச போது யாழ்ப்பாண நகரமும், அதன் வீதியளும் போதாது எண்டு நினைச்சேன்.

பன்னிரண்டு மணிக்குச் சற்று முன்னமா ஷெல் சத்தம் கேட்டுது. பிறகு அடுத்துத் தொடுத்து ஒரே டமார் டமார் தான்!

'ஊசிப்பட்டாசே, வேடிக்கையாய்த் தீ வைத்தாலாலே வெடி டமார் டமார்!' பழைய காலத்து இந்தச் சினிமாப் பாட்டு கோட்டைக்குள்ளை இருக்கிற சிப்பாய்மாருக்குத் தெரிமோ எண்டு நினைக்கத் தோன்றுதப்பா!

தீபாவளி கொண்டாட நினைக்கிறவைக்குத் தங்கடை பட்டாசுகளை காட்ட எண்ணிவிட்டினம் போலை. ஷெல்லுகளை ஏவித் தள்ளிச்சினம்.

யாழ்ப்பாணம் வந்த இருவர் மரணமாகினர். மற்றும் 33 பேருக்குக் காயம். எண்டாலும் சனம் பயப்பட்டதாத் தெரியயில்லை. கொஞ்ச நேரம் படபடத்துதுகள் மினி பஸ்கள் எல்லாம் வின்சர் சந்தியைத் தஞ்சம் அடைந்தன. அவ்வளவு தான் ஆனால் இரண்டு மணிக்குப் பிறகு வழமை போல் பாசாரிலை வியாபாரம்; சந்தடி!

சனத்துக்கு உது எல்லாம் இப்ப பழக்கப்பட்டுப் போச்சு. சரியாச் சொல்லுற தெண்டா ஷெல், சூடு எல்லாத்துக்கும் எங்கடை சனம் 'இமியூன்ட்' ஆகிப் போச்சுதுகள்!

* * *

அண்டைக்கு செவ்வாய்க்கிழமை இரவு 9.40 மணி அளவிலை இருந்தாப்போலை 'கறண்ட்' நிண்டு போச்சுது! யாழ்ப்பாண நகரத்திலை அது சர்வசாதாரணம். மழை தொடங்கின நாளைக்குக் குறைஞ்சது இருபத்தைஞ்சு தரமாவது கறண்ட் போகும்; வரும்; போகும். அதாலை அது வழமையான வியாதி எண்டு, இருந்து விட்டோம்.

பிறகு தான் சங்கதி தெரிய வந்தது. சுன்னாகம் மின் நிலையத்திலையே 'மக்கர்' இருந்தது எண்டு. அதுக்குக் காரணம் அனுராதபுரத்திலை ஏதோ கோளாறு எண்டும் ஒரு குரல் சொல்லிச்சுது.

அது உண்மையோ பொய்யோ எண்டு தெரிஞ்சு கொள்ளுறதுக்கு முன்னம், வடக்குக்கு மின்சாரம் வழங்குவதா எண்டு ஸ்ரீலங்கா பார்லிமெண்டிலை எழுப்பப்பட்ட கேள்வியும் பதிலும் தான் மனதிலை திரை ஓடிச்சுது.

குடாநாடு போராளிகளின் கட்டுப்பாட்டிலை இருப்பதாலை அதுக்கு மின்சாரம் விநியோகிக்கக் கூடாது எண்ட தொனியிலை தான் அங்கு கதைச்சினம். பிறகு அப்பிடிச் செய்யிறது சரி இல்லை எண்டு சொல்லிச்சினம். எல்லாத்தையும் சொல்லிப்போட்டு செயலிலை இறங்கிவிட்டினமோ எண்டு நினைக்க வேண்டியதாய்ப் போச்சு.

சரி மின்சாரத்தை வெட்டிப் போட்டா என்ன செய்யிறது. அது இல்லாட்டால் ஒண்டுமே செய்ய முடியாத நிலை ஏற்படும் எண்டு நினைக்கப் பயமாய் இருக்குது. இதை நாங்கள் பகிடியாக எடுக்கக் கூடாது தம்பி இப்பவே மாற்று மின்சார உற்பத்திக்கான வழிமுறைகளைக் கையாள வேணும்.

உயிர்வாயு சக்தி, சூரியசக்தி ஆகியவற்றை உற்பத்தி செய்ய உடன் ஏற்பாடு தேவை.

அதுவரைக்கும் தமிழ் நாட்டிலையிலிருந்து மின்சாரம் வாங்கலாம் எண்டு நினைக்கிறேன். ஏனெண்டா ஸ்ரீலங்காவே முந்தி ஒருக்கா அப்பிடி ஒரு யோசனை போட்டது ஞாபகமாய் இருக்குது!



கொண்டோடி

## கோட்டைக்குச் செல்வதில் சிக்கல்

# வங்கிகள் ஊடாகவே இனிமேல் ஓய்வூதியம்

## தபாலகங்கள் மூலம் இல்லை

யாழ்ப்பாணம், அக். 30

யாழ் மாவட்டத்தில் உள்ள தபால் அலுவலகங்களில் ஓய்வூதியம் பெறுவோர் ஏதாவது ஒரு வங்கியில் உடனடியாக கணக்கை ஆரம்பிக்கவேண்டும். அக்டோபர் மாதத்தில் இருந்து இந்த வங்கிக் கணக்குகள் ஊடாகவே ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ் பிரதம தபால் நிலையத்தின் கீழ் இயங்கும் தபால் அலுவலகங்கள் தவிர்ந்து, குடாநாட்டில் உள்ள ஏனைய தபால் அலுவலகங்கள் கோட்டைக்குச் சென்று ஓய்வூதியம் வழங்க மறுப்பதன் காரணமாகவே இந்தப் புதிய முறை கொண்டுவரப் பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ் செயலக கணக்காளர் (ஓய்வூதியப் பிரிவு) விடுத்த அறிக்கை வருமாறு;

கிராமியவங்கி, அல்லது வர்த்தக வங்கியில் கணக்கு ஆரம்பித்து, தங்கள் ஓய்வூதியங்களை அந்தக் கணக்கிற்கு மாற்றித் தரும்படி விண்ணப்பித்த, ஓய்வூதியம் பெறுவோரின் ஒரு பகுதியினரின் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பட்டியல்களில் இடம்பெற்ற ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களும் அந்தந்த கிராமிய வர்த்தக வங்கியிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளன.

எனவே, கிராமிய வங்கி அல்லது வர்த்தக வங்கியில் கணக்கு ஆரம்பித்து, எனக்கு முன் அறிவித்தல் தந்த ஓய்வூதியம் பெறுவோர் சம்பந்தப்பட்ட வங்கிக்குச் சென்று தங்கள் பெயர் அவ்வங்கிப் பட்டியலில் இடம் பெற்றிருந்தால், அவர்களிடமிருந்து பற்றுச் சீட்டைப்பெற்று, தங்கள் ஓய்வூதியத்தை பெறும்படி இத்தால் கேட்கப்படுகின்றனர்.

மேலும் இந் நடைமுறைக்கிணங்க வங்கி ஒன்றில் கணக்கு ஆரம்பித்து அறிவித்த ஓய்வூதியம் பெறுவோரின் இரண்டாவது பட்டியல் தற்பொழுது தயாரிக்கப் படுகின்றன. அப்பட்டியல்களும் வெகு விரைவில் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப் படவுள்ளன. அவர்களும் இவ்வண்ணம் தங்கள் ஓய்வூதியத்தைப் பெறலாம் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் இற்றைவரை ஏதாவது ஒரு வங்கிக்கு தங்கள் ஓய்வூதியத்தை மாற்றுதவர்கள், ஏதாவது ஒரு வங்கியில் உடனடியாக கணக்கை ஆரம்பித்து அறியத் தரும்படி இத்தால் கேட்கப்படுகின்றனர். அதன் பின்பே அவர்களுக்கு 1986 ஆண்டு ஒக்டோபரிலிருந்து ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

–இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது .(உ-எ)

## அடுத்த 2 வார காலம் மிக நெருக்கடியானது

### அமைச்சர் அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, அக். 30

அடுத்த இரண்டு வார காலம் மிக நெருக்கடியானது.

—இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

பெந்தர – எல்பிட்டிய தொகுதியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

பேச்சுக்களில் கலந்து கொள்வதா இல்லையா என்ற நிலையைத் தீவிரவாதிகள் எடுத்துக் கூற வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். பேச்சுக்களில் கலந்துகொள்ள தீவிரவாதிகள் மறுத்தால், அரசாங்கம் கடுமையான மாற்று நடவடிக்கைகளைத்தான் எடுக்கும்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அடுத்த இரண்டு வாரகாலம் மிக நெருக்கடியான கட்டமாகும்.

—இப்படி அமைச்சர் சொன்னார். (மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (உ-எ(

## ஆஸ்பத்திரி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தலை வெடித்த நிலையில் அந்த இடத்திலேயே மரணமானன்,

படுகாயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்ட நாகேஸ்வரி(வயது 35) என்ற பெண் நேற்று இரவு மரணமானர். இவர் சுன்னுகத்தைச் சேர்ந்தவர்.

### பொலிஸாரும் காயம்

வீதியில் நடந்துசென்ற கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் உட்பட 33 பேர் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரியின் முன் மதிலும் இதனல் சேதம் அடைந்துள்ளது.

இந்த ஷெல் குண்டு நண்பகல் 12-05 மணியளவில் விழுந்து வெடித்தது.

அதற்கு சற்று முன் வரை—நண்பகல் 12மணி வரை — ஏராளமான பொதுமக்கள் ஷெல் குண்டு விழுந்த இடத்துக்கு அருகில் ஆஸ்பத்திரி வாசலில் கூட்டமாக கூடி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்பத்திரியில் நோயாளரைப் பார்வையிட காத்திருந்த பொது மக்கள் நண்பகல் 12 மணிக்கு ஆஸ்பத்திரிக் கதவு திறந்துவிடப் பட்டதால் ஆஸ்பத்திரிக்குள் சென்று விட்டனர்.

ஐந்துநிமிடம் கழித்து ஷெல் குண்டு அந்தஇடத்தில் விழுந்ததால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

### கொட்டடியில்

நேற்று கொட்டடிப் பகுதியில் விழுந்த ஷெல் குண்டினல் வீடு ஒன்று சேதமுற்றது. ஒருவர் காயமடைந்தார்.

பலாலி வீதி புகையிரதக் கடவை அருகேஉள்ள பாலம் ஒன்றினுள்ளும் ஒரு ஷெல் விழுந்து வெடித்துள்ளது.

தொடர்ச்சியாக நேற்று மாலைவரை விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (உ-10-5)

## 38 அகதிக - .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஏற்றி வந்தனரா?

—இது பற்றிய தகவல்களை பெற இரண்டு பேரையும் கொழும்புக்கு அழைத்துவர குடியகல்வு குடிவரவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்திய தூதரக அதிகாரிகள் முன்னிலையில் இரண்டுபேரையும் இலங்கை அரசு அதிகாரிகள் விசாரணை செய்வர். (உ-எ)

## உடுப்பு வாங்க வந்தவர் ஷெல்லுக்கு இரையானர்

யாழ்ப்பாணம்,அக்.30

என்னை ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்டு உடுப்பு எடுத்துக் கொண்டுவருகிறேன் என்று சொன்னவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே மரணமானர்.

நேற்றைய ஷெல் தாக்குதலில் மரணமான தம்பிராசா தவதீசனுடன் மோட்டார் சைக்கிளில் வந்த அவரது மாமியார் தனபாலசிங்கம் இரத்தினவதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு நடந்த சம்பவம் பற்றி மேலும் சொன்னதாவது:–

நேற்று 12 மணி அளவில் ஆஸ்பத்திரி வீதியால் நானும் காலஞ் சென்றவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம்.

ஆஸ்பத்திரி காந்தி சிலைக்கு அருகே உள்ள வாசலில் என்னை இறக்கிவிட்டு ரவுணுக்குப் போய் உடுப்பு எடுத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு சற்று தூரம் சென்றதும் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது.

சத்தத்தை அடுத்து நாம் வந்த திசையை நோக்கி ஓடினேன்.

அங்கு பார்த்த போது எனது மருமகன் மோட்டார் சைக்கிளுடன் தலைகுப்புற விழுந்து கிடந்தார்.

அவர் அருகே. சென்ற போது அவரது உடலிலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முற்படுகையில் அவர் இறந்துவிட்டார்.

— இப்படி அவர் சொன்னர். (உ-10)

## இராணுவத்தில் கரடி

கொழும்பு, அக்.30

மாங்குளத்தில் சிப்பாய்களினல் பிடிக்கப் பட்ட கரடி ஒன்று கொழும்பு இராணுவ முகாமுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

மாங்குளத்தில் முகாமிட்டுள்ள சிப்பாய்கள் இக்கரடியைப் பிடித்தனர். இதுவரைகாலமும் அது மாங்குளம் முகாமில் வைத்து வளர்க்கப்பட்டது,

இப்போது இக்கரடி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம்:அக்,30

நேற்றைய ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர் சிலரின் விவரம் மாறு:–

1. நாகமுத்து சின்னையா (76 வயது) ஆஸ்பத்திரி வாசலில் கிளிச் சாத்திரம் பார்ப்பவர் கிளிநொச்சி வாசி.
2. மார்க்கண்டு குமரசிங்கம் கோண்டாவில் வடக்கு ஆஸ்பத்திரி ஊழியர்.
3 . பொன்னுத்துரை சரச்சந்திரன் (36 வயது) புத்தூரைச் சேர்ந்தவர் பொலீஸ் உத்தியோகத்தர்.
4. சீனிவாசகம் ஜயாத்துரை, (47 வயது) அச்சுவேலியைச் சேர்ந்தவர் இவரும் பொலீஸ் உத்தியோகத்தர்.
5. யோகராஜா யோகேந்திரன் (24 வயது)சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமலையைச்சேர்ந்தவர். இவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.
6. செல்வநாயகம் சோதிராசா (26 வயது) வீமன்காமத்தைச் சேர்ந்தவர் யாழ் கச்சேரி சிறுகைத் தொழில் திணைக்களத்தின் இளவாலை, ஊர் காவற்றுறை பொறுப்பாளர்.
7. செல்வி. அருளம்பலம் வான்மதி (24 வயது)கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்.
8. தம்பிராசா இராசதுரை (27 வயது)
9. ஜெயதேவன் உருத்திரன் (18 வயது) யாழ் மத்திய கல்லூரி மாணவர் நீர்வேலியைச் சேர்ந்தவர்.
10. சண்முகம் தியாகராசா (49 வயது) இருபாலைவாசி. முன்னுள் திருகோணமலை துறைமுக அதிகாரசபை இலிகிதர்.
.11 சின்னவன் கந்தசரமி (30 வயது) தொல்புரம்.
12. சிகம் சாம்சன்(38 வயது) அரியாலை, கடற்றொழில் செய்பவர்.
13. மீரான் மொகைதீன்.
14. திருமதி கதிரேசு சந்திராதேவி. (43வயது) தாவடி.
. 15 திருமதி பாக்கிய நேசன் பகவதி(45வயது)
16. நாகமணி அரசரத்தினம்(36வயது)கடற்றொழில் செய்பவர் ஊர்காவற்துறை.
17. சின்னையா கார்த்தியேசு (55வயது)தேசிய [illegible] அதிபர்.
18. பொன்னம்பலம் விவ்வராசா (19 வயது) சேமமடு, வவுனியா.
19. தர்மலிங்கம் ஜெயராசா (26 வயது)அச்சுவேலி — இவரது நிலை கவலைக் கிடமானதாக இருந்தது.
20. எஸ். தனபாலசிங்கம்– அரியாலை-
21. பி. செல்வேந்திரன்– அரியாலை.
22. மா. இராமநாதன்– கரவெட்டி.
.23 எம். எம். சமீன்– முஸ்லீம் வீதி.
24. ஆர். இரவீந்திரன்– கொழும்புத் துறை. (உ–5–10)

## புளொட்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உறுதி வழங்கப்பட்ட போதும் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் எமது ஸ்தாபனத்தை முற்றுக அழிக்கின்ற நோக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

மீண்டும் ஒரு இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 29–10–1986 இலிருந்து தளத்தில் (தமிழ் ஈழத்தில்) தற்காலிகமாக இயங்காமல் இருக்க முடிவு செய்யப்பட்டது.

யாழ், மக்களை நம்பி யாழ் மாவட்டத்தில் எமது முகாம்களில் தங்கியிருக்கும் கிழக்கு மாகாணத் தோழர்களை உத்தேசித்தும், மீண்டும் ஒரு இயக்க மோதல் ஏற்படக்கூடிய விளைவுகளை உத்தேசித்தும் நாம் இந்த முடிவைச் செய்துள்ளோம் – என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## ஹெலிகளை---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நோக்கிப் புலிகள் தாக்குதல் நிகழ்த்தினர்.

இதனையடுத்து நிலைதடுமாறியநிலையில் வேகமாக மேலே உயர்ந்த ஹெலிகள் அங்கிருந்து ஒருக்கட் மோட்டார், 50 கலிபர் குண்டுகளைத் தீர்த்தன.

அவ்வேளையில் சிப்பாய்களும் வெளியே வர முயற்சித்தனர்.

புலிகள் அவர்களை நோக்கித் தாக்குதல் நிகழ்த்தியதையடுத்துச் சிப்பாய்கள் பின்வாங்கி முகாமுக்குள் சென்றனர். ஹெலிகளும் தரையிறங்க முடியாது திரும்பிச் சென்றன.

இந்தத் தாக்குதல்கள் சுமார் ஒருமணி நேரம் நீடித்தன. (உ–160)

## உற்பத்தி முகாமையாளர் பதவிக்கான பயிற்சி நெறிக்கு ஆட் சேர்ப்பு விண்ணப்பம்

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களில் உருவாக்க இருக்கும் உற்பத்தி முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகுதியுடையவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் பின்வரும் தகமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள்—

**பொது முகாமையாளர், வடமாகாண தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களின் சமாசம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15-11-1986-ம் திகதிக்கு முன்**

கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பயிலுனர்கள் யாவருக்கும் வேலை வழங்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை.

**தகமைகள்:-**

க. பொ. த. (உயர்தரம்) இரசாயனம், பௌதிகம் உட்பட நான்கு பாடங்களில் சித்தியும்,

க. பொ. த. (சாதாரணம்) கணிதம், மொழி, இரசாயனம், பௌதிகம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 25 – 35 வருடங்கள்

சம்பளத்திட்டம்:-
400/–20–10,30–4–720/–(வாழ்க்கைப்படி தவிர)

குறிப்பு;- தற்போது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் முகாமையாளர்களுக்கு மேற்கூறிய தகமைகளில் இருந்து விலக்களிக்கப்படுகின்றது.


தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

A/L 87
PAPER CLASS
பிரிவு I
விரைவில் ஆரம்பம்
New Master Institute
B. M. C. Lane, JAFFNA.

A/L 87
DAY CLASS
பிரிவு III
விரைவில் ஆரம்பம்
New Master Institute
B. M. C. Lane, JAFFNA.

G C E. (A /L.) 1987
Evening Classes
PHYSICS — VARNAM
3 - 11 - 86 புதிய பிரிவுகள் ஆரம்பம்
திங்கள், வெள்ளி 3 — 4 Electricity
திங்கள், வெள்ளி 4 — 5 Mechanics
NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருவாளர் சி. நடராசா (அதிபர்) அவர்கள்

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் குலவிளக்காய், குன்றுத அறிவும், பொறுமையின் பொக்கிஷமுமாய் வாழ்ந்த எம் குல தெய்வமே, அறிவெனும் பாலூட்டி, அன்பெனும் அரவணைப்பில் எம்மையெல்லாம் காத்து வளர்த்த கனிந்த உள்ளமே, உமது பிரிவால் இன்று தவித்து நிற்கிறோம். நீர் காட்டிய அறநெறியில் வாழ அருட்தெய்வமாய் என்றும் ஆசித்தருளும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அமரரின் இறுதிக்கிரியைகளில் எம்முடன் கலந்து துயர் கூடிய அனைவர்க்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்.

அன்னரின் யோகபுரம் இல்லத்தில் 2 – 11 – 86 ஆம் திகதி ஞாயிறன்று நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்தில் உற்றூர், உறவினர், நண்பர்கள், ஆசிரிய நண்பர்கள், மாணவ மாணவிகள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி புவனேஸ்வரி நடராசா
ஆசிரியையும்
மக்களும்

239, 3 ம் யூனிற்,
யோகபுரம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
வெளியிட்ட திகதி: 30 – 10 – 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd15, Second Lane, Power House Road, JAFFNA
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org